## முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## TROP.26/2022

PW–1 வசந்தா நாள்.06.10.2025

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

நான் வட்டி பிரச்சனை சம்மந்தமாக முதலமைச்சரின் தனிபிரிவு மற்றும் காவல் உயர் அதிகாரிகளுக்கு புகார் அனுப்பினேன். நான் ரூ.5லட்சம் தான் கடன் வாங்கியதாகவும், ரூ.1லட்சம் வட்டி சேர்த்து ரூ.6லட்சம் என்று பத்திரம் எழுதி வாங்கியதாக புகாரில் கூறியுள்ளது போன்று எனது மனுவிலும் கூறியுள்ளேன். நான் பணம் திருப்பி கொடுக்க சென்றபோது அதிக வட்டிகேட்டு அதை பெற மறுத்துவிட்டதாக நான் முதலில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. இது சம்மந்தமாக வழக்கறிஞர் அறிவிப்பும் முதலில் நான் அனுப்பவில்லை. நான் கடன்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள தொகையை தான் கடனாக வாங்கினேன் என்றும், தற்போது வழக்கிற்காக அதை நான் மறுக்கிறேன் என்றால் சரியல்ல. திருச்சியில் உள்ள பிளாட்டை விற்று கடனை செட்டில் செய்ததாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. புகாரில் கூறியுள்ள விவரங்களை நான் வழக்கிலும், நிருபணவாக்குமூலத்திலும் கூறவில்லை என்றால் சரியல்ல. நான் மனுவில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.